DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 55/ 2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 1(Recall)

LW -1

Name : முத்துப்பாண்டி

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 03.02.2026

3. **( A1, present / A2 absent 317 petition filed and allowed)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**CRMP 16/2025 மனு 16.12.2025 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி குறுக்கு விசாரணைக்காக திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.**

**குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 05.04.2019 ம் தேதியன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இரவு 10.30 மணிக்கு விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது என்னுடன் இருந்தது யார் என்றால் எனது மாமா சங்கர ராசு, சித்தப்பா பெருமாள், அம்மா சரோஜா ஆகியோர்கள் என்னுடன் இருந்தார்கள். குருவிகுளம் போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் மயக்க நிலையில் இருந்ததால் யார் என்னை விசாரித்தார்கள் என்ற விவரம் தெரியவில்லை. எனக்கு மயக்கம் எவ்வளவு நேரம்இருந்தது என்றால் இரவு 1.30 மணி வரை மயக்க நிலையில் தான் இருந்தேன். போலிசார் யாரிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் என்னிடம் தான்

வாக்குமூலம் பெற்றார்கள். மேற்படி வாக்குமூலத்தில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நான் மயக்க நிலையில் இருந்ததால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இருசக்கர வாகனம் செல்லக்கூடிய இடம் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் என்னுடன் யாரும் இல்லை. மறுபடியும் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் 10.04.2019 ம் தேதியன்று குருவிகுளம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் திருமணத்திற்கு முன்பு எனது மனைவி 1ம் எதிரியுடன் தொடர்பில் இருந்தார் என்ற விவரத்தை பற்றி போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். காவல் நிலையத்தில் மேற்படி இருவரையும் கூப்பிட்டு விசாரித்து அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்னரும் எனது மனைவி என்னுடன் இல்லை தனியாகத்தான் இருந்தார். நான் சொல்லக்கூடிய நாள், நேரத்தில் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , எனது மனைவி மீது சந்தேகப்பட்டு, தானாகவே மருந்து குடித்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தற்போது நானும், எனது மனைவியும் ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எழுதி வைத்திருந்த வெள்ளைத் தாளில் மட்டும் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும், இல்லை என்று சொன்னாலும், மேற்படி எதிரிகள் மீது முன் பகை காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/- P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 55/ 2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 2(Recall)

LW -2

Name : பாலசுப்பிரமணியன்

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 03.02.2026

4. **( A1, present / A2 absent 317 petition filed and allowed)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**CRMP 16/2025 மனு 16.12.2025 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி குறுக்கு விசாரணைக்காக திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.**

**குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 முத்துப்பாண்டி என்பவரும் நானும் ஒரே நிறுவனத்தில் வேலை செய்கிறோம் என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 04.04.2019 ம் தேதியன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இரவு 10.00 மணிக்கு விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது என்னுடன் இருந்தது யார் என்றால் நானும், பெருமாள் என்பவரும் இருந்தோம். நான் மருத்துவமனைக்கு எனது சொந்த வாகனத்தில் தான் வந்தேன். மேற்படி சம்பவம் பற்றி மருத்துவமனையில் இருந்த முத்துப்பாண்டி என்பவர் மூலம் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் மறுபடியும் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 என்னுடன் வேலை செய்து வருவதால்

அவருக்கு ஆதரவாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சொன்ன நாள் நேரத்தில் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/- P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.